போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

ஆசிரியர்கள்: காஞ்சி.மணிமொழியார், மா.இளஞ்செழியன் (...)

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 7
சென்னை, 22—1—49

இதழ் 21

திருவள்ளுவர் இலக்கியமே தமிழரின் கருவூலம்!

திருக்குறள் மாநாட்டில் தமிழ்ச்சான்றோர் தெளிவுரை

"எங்கள் தலைவர் பெரியார் அவர்களே! தமிழகத்தின் தூடும் த் தலைவர் போன்றவரே! இந் ள் தாங்கள் எம் கரத்திலே றலரும் திருக்குறளை அளித் ருக்கிறீர்கள். இதன் அருமை யும் பெருமையையும் நாங் மிக நன்றாக அறிவோம், தன் அருமை பெருமைகளை துவரை மறைத்துவந்தவர்களை , அவர்கள் ஏன் மறைத்து தார்கள் என்பதையும் நாங் அறிவோம். ஆகவே இத் நக்குறளைக் கையில் ஏந்திய ண்ணம் இனி பட்டி தொட்டி ல்லாம் செல்வோம், இதன் மைப் பரப்புவோம். தாங்கள் டுத்த எந்த திட்டத்தையும் றவேற்றத் தவறியவர்கள் ல நாங்கள். நாங்கள், தாங் அளித்த ஒவ்வொரு மணி யும் பொன் அணியாக ஆக்கி க்கிறோம். தாங்கள் கொடு ஒவ்வொரு அரும்பையும் ய மலராக மாற்றி இருக் றோம். தாங்கள் வித்திட்ட வொரு முளையையும் ழம் பயிராக ஆக்கி இருக் றோம். ஆகவே இன்று தாங் எமக்களித்துள்ள இந்த ம் பொருளையும் தக்க முறை யிலேயே பயன்படுத்துவோம்; வீணாக்கமாட்டோம். திருக்குற ளுக்குத் தரப்பட்டிருக்க வேண் டிய ஆனால் தரப்படாமல்போன இடத்தை தமிழகத்தில் ஓர் ஐந் தாண்டு காலத்தில் நாங்கள் பெற்றுத் தருவோம் என்று, எங்கள் தலைவரே, தாங்கள் அளிக்கும் திருக்குறளைக் கையில் ஏந்தும் இந் நன்னாளில் தங்கட்கு உறுதி உரை புகல விரும்புகி றோம், தங்கள் செயல் திட் டத்தை மேற்கொண்டு இனி திக் கெட்டும் சென்று திருக்குறளின்

"ஐயையோ திருக்குறளா!"

சிறப்பை விளக்கத் தவறோம்."

தளபதி அண்ணா அவர்கள் **தலைவர் பெரியாரை** நோக்கியவண்ணம், வார்த்தை வார்த்தையாக ஆனால் அழுத்தந்திருத்தமாக, அமைதியான முறையில ஆனால் உறுதியான குரலில், இனிமைச் சுவையுள்ள சொல்லில் ஆனால் தன்மான எழில் ததும்பும் விதத்தில், இந்தச் சூளுரையைப் புகன்றபோது, சென்னை திருவள்ளுவர் மாநாட்டில் கடல்போல் குழுமியிருந்த மக்கட் கூட்டம் களிப்புக் கடலில் குதித்துக் கூத்தாடலாயிற்று—வாழ்க அண்ணா வாழ்க அண்ணா என நல்வாழ்த்து மொழியலாயிற்று. காரணம், அண்ணாவின் அந்த அழகுரை, அண்ணாவின் நல்லுள்ளத்தை மட்டும் படம் பிடித்துக் காட்டிற்றில்லை; மாநாட்டில் ஈண்டியிருந்த ஆயிரமாயிரம் தமிழர்களின் நெஞ்சம் அத்தனையையுமே ஒரு சேரப் படம் பிடித்துக் காட்டிவிட்டது. அண்ணாவின் பேச்சு அண்ணாவின் பேச்சாக இல்லை. அங்குக் கூடியிருந்த எல்லோருடைய பேச்சாகவும் இருந்தது. அவருடைய அந்த அரிய சொற்பொழிவின் ஒவ்வொரு வாசகமும், அந்த வாசகத்தின் ஒவ்வொரு வார்த்தையும், அந்த வார்த்தையில் துள்ளி விளையாடும் ஒவ்வொரு எழுத்தும், அந்த எழுத்தின் ஒவ்வொரு அசைவும், மக்கள் உள்ளத்தில், அதே நேரத்தில் அலைமோதிக் கொண்டிருந்த எண்ணங்களின் எழில்மிகு நாதமாக இருந்தது—எனவே எல்லோர் உள்ளத்திலும் இன்பம் நர்த்தனமாடிற்று, அண்ணாவின் இன்பவுரை அவர்கள்தம் செவி வழியே புகுந்து அவர்கள் சிந்தையில் தேன் பாய்ச்சிய ஞான்று!

"தலைவர் அவர்களே! பெரியார் அவர்களே! தாங்கள் இன்று வகுத்துத் தந்துள்ள இந்த அரிய செயல் திட்டத்தை நடைமுறைக் கிதம் ஆக்கத் தவறோம், தவறோம்" என்று சூள் உரை புகன்றதோடில்லை அண்ணா அவர்கள், மேலும் சொன்னார்:

"நல்லதோர் போர்வாளை வீரனிடம் தரவேண்டுமே தவிர மற்றவர்களிடம் தரக்கூடாது. அதுபோலக் குறளை ஏந்துமுன்னால் அந்தக் குறளை ஏந்துவதற்குரிய தூய்மை நம் கரத்திலே இருக்கவேண்டும். அது இல்லாமல் இருந்தது நம் கரத்தில்; எனவேதான் பெரியார் இந்த இருபதாண்டு காலமாக ஓயாமல் சுழன்று சுழன்று பணியாற்றினார், நம் கரத்திலே படிந்திருந்த மாசைத் துடைத்தார், நம் கைகளிலே இருந்த பலவீனத்தைப் போக்கினார், இன்று அந்த அரிய பணியின் பயனாக, நம் கரத்திலே நல்ல உரம் ஏற்பட்டிருக்கிறது, மிகுந்த தைரியம் ஏற்பட்டிருக்கிறது, தூய குறள் ஏந்துவதற்கு வேண்டிய தூய்மை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான் பெரியார் திருக்குறளை இப்போது நம் கரத்திலே அளிக்கிறார், இதுவரை காத்திருந்தார்."

அழிவின் முடிவிலேயே ஆக்கம் பிறக்கும் என்ற அரிய தத்துவத்தை இங்ஙனம் அழகுற விளக்கிய **அண்ணா**, மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

"இனி திராவிடத் திருமகன் ஒவ்வொருவன் கரத்திலேயும் குறள் மின்னும். தமிழர்கள் கூடும் ஒவ்வோரிடத்திலேயும், குறள் ஒளி வீசும். திருவள்ளுவர் அளித்த இந்த எழில்மிகு இலக்கியத்தைக் கையில் ஏந்திய வண்ணம், வரிசை வரிசையாக, கூட்டம் கூட்டமாக, தமிழர்கள் செல்லக் கண்டால், சிறு விநாயகரை ஏந்திய கைகள் எல்லாம் குறள் நூலை ஏந்தக் கண்டால், இராமாயணத்தையும் மாபாரதத்தையும் ஏந்திய கைகள் திருக்குறள் என்னும் திருவிளக்கை ஏந்தக் கண்டால், பரம்பரை பரம்பரையாக இதிகாச புராணங்களையே ஏந்திய கைகள் இந்தத் தமிழ்ப்பெரும் இலக்கியத்தை ஏந்தக் கண்டால் ஆரியரின் கண்கள் மட்டுமல்ல, கருத்து மட்டுமல்ல, எதிர்காலமே இருண்டுபோய்விடும்—ஐயமே வேண்டியதில்லை."

ஆம்! ஆம்! அது உண்மை என்றனர் மக்கள். உண்மை அந்த அளவிலே நிற்கவில்லை மேலும் உண்டு என்று புகன்ற வண்ணம், புன்சிரிப்பு முகத்தில் தவழத் தவழ, அண்ணா தொடர்ந்து பேசினார்!

"திருக்குறள் விளக்கை ஏந்திய வண்ணம் தமிழன் செல்வதைக் கண்டுவிட்டால் பகவத் கீதையை ஏந்திய ஆரியர், அந்தோ இனி இந்த விளக்கின் ஒளி, இவர்கட்கு, இவர்கள் செல்லவேண்டிய பாதையில் நாம் தூவியுள்ள நச்சு விதைகளைப் புலப்படுத்திவிடுமே, நாம் ஆங்காங்கே இவர்களை வீழ்த்த வேண்டி தோண்டியுள்ள பெரும் பெரும் பள்ளங்களை இவர்கள் அறிந்துவிடுவரே, அறிந்துவிட்டால், பிறகு இவர்கள் தாளிலே நம் தோள் வீழுமே என்று அஞ்சுவர். அஞ்சினால், பிறகு அவர்களைவிட திருக்குறளை அருமையாகப் பாராட்டிப் பேசுவோர் வேறு யாரும் இருக்க மாட்டார்கள், அவர்களைவிட நம் பின்னேடும் பிள்ளைகள்—நம்மைப் பின்பற்ற தயார் கூறுவோர்கள் நிச்சயமாக வேறு யாரும் இருக்கமாட்டார்கள் மிக விரைவில், தலைவரே, அந்த நிலையை உண்டுபண்ணிக் காட்டுவோம்."

அண்ணா, இங்ஙனம், மீண்டும் தலைவர் பெரியாரை நோக்கி உறுதியுரை புகன்றுவிட்டு கடைசியாகக் கூறினார்:

"பெரியார் அவர்களே! இதோ தங்கள் பின்னால் ஒ

பெரும்படை நிற்கிறது. இது இலேசான படை அல்ல. பலப் பல வெற்றிகளைக் கண்ட படை. போர் பல நடத்தி நற்பயிற்சி பெற்றுள்ள படை; தொடுத்த போர் ஒவ்வொன்றிலும் வெற்றியன்றித் தோல்வியையே கண்டறியாத படை; இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்று மனோன்மணீயத்தில் கூறப்படும் வாசகத்திற்கு ஏற்ற படை, இத்தகு படை இன்று தாங்கள் வகுத்துத் தந்துள்ள திருக்குறள் திட்டத்தை நிறைவேற்ற முரசு கொட்டிக்கொண்டு கிளம்பிவிட்டது. இனி இப்பெரும்படை திக்கெட்டும் செல்லும், திருக்குறளின் சிறப்பை ஒலிக்கும், தங்கள் இதயம் மகிழ பணியாற்றும். ஆம்! நிச்சயம்!"

அண்ணாவின் சொற்பொழிவு முடிந்தது, அத்துடன் மாநாடும் முடிந்தது, ஆரிய எதிர்ப்புப் போராட்டத்திற்கான அரிய போர்க் கருவியே திருக்குறள் என்னும் சிறந்த உண்மையை தமிழ் நாட்டார்க்கெல்லாம் நன்கு விளக்கிய இரண்டு நாள் மாநாடு பெரியார் பெரும் படையின் சார்பில் அதன் தளபதி அண்ணா அவர்கள் பெரியாரிடம் உறுதிமொழி கூறுகின்ற அந்த அளவில் முடிந்தது மிகமிகப் பொருத்தமாக அமைந்திருந்தது. திருவள்ளுவர் இலக்கியமே தமிழின் கருவூலம் என்று தலைவர் பெரியார் அவர்கள் பொன்மொழி புகல, அந்தக் கருவூலத்தின் மாட்சிமையை தமிழகம் முழுவதும் பரப்ப நான் தவறேன் என் படையும் தவறாது என்று தளபதி அண்ணா அவர்கள் சூளுரை கூற, தலைவரும் தளபதியும் இட்ட இந்த ஆணையை நிறைவேற்றுவதே எங்கள் கடமை என்று மாநாட்டிற் கூடியிருந்த மக்கட் கூட்டம் மகிழ்ச்சியுரை புகல, இந்த அரிய காட்சியின் மாட்சிமை கண்டு மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ்ச் சான்றோரும் ஆன்றோரும், "தமிழகம் இனி தலை நிமிர்ந்து நிற்பது உறுதி—தமிழன் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடிற்று இவ் வையம் என்று கேட்டு நாம் இன்ப ஊற்றுக் கேணியிற் குளிப்பதும் உறுதி" என்று மனக்களிப் படைய, குறளின் ஒலியும் ஒளியும் தமிழகம் எங்கணும் மட்டுமல்ல உலகம் முழுவதுமே பரவும் நாள் வந்தது வந்தது என்று தமிழரெலாம் ஆநந்தத்தால் துள்ளிக் குதிக்க, மாநாடு, இரண்டு நாட்கள் மிகச் சிறப்பாக நடந்து, இரண்டாம் நாள் மாலை முடிவுற்றது.

"எனக்கு எப்போதுமே தீவிரமாகப் பேசவேண்டும் தீவிரமாக நடக்கவேண்டும் என்ற ஆசை உண்டு. என் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த இந்தத் தீவிர உணர்ச்சியே என்னைக் காங்கிரசுக்குச் செலுத்திற்று. காங்கிரசில் நான் நுழைந்தபிறகு என் தீவிரம் 'ரொம்ப' தீவிரமாகிவிட்டது. காங்கிரசால் என் தீவிரத்தை அதிக நாள் தாங்க முடியவில்லை. ஆகவே காங்கிரசைவிட்டு வெளியேறி விட்டேன். பிறகு மதம் சாதி கடவுள் பாவம் புண்ணியம் மோட்சம் நரகம் எல்லாவற்றையுமே 'ஒரு கை' பார்க்க ஆரம்பித்தேன். என் கருத்துக்கு மாறாக இந்த மதமோ இந்தக் கடவுளோ இப்படிச் சொல்கிறது என்று யாராவது சொன்னால் அந்தக் கடவுளையும், அந்த மதத்தையும் எடுத்து எறி என்றுதான் சொல்லத் தொடங்கினேனே தவிர கடவுளும் மதமும் 'கூறுவதற்கேற்ப என் கருத்தை மாற்றிக்கொள்ளும் வழக்கம் என்னிடம் இருந்ததே கிடையாது. நாயனார் இப்படிச் சொன்னார் ஆழ்வார் அப்படிச் சொன்னார்—அதை எல்லாம் நீ மறுக்கலாமா என்று எவரேனும் சொன்னால் எந்தக் கருப்பன் எப்படிச் சொன்னால் எனக்கென்ன? என் உறுதி, என் அறிவு, என் தைரியம், எனக்குப் போதும் என்றுதான் நான் சொல்லி வந்தேன். என்னிடத்தில் எப்போதும் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. என் அறிவின் திறத்தில் உறுதியில் மிகுந்த பற்றும் நம்பிக்கையும் கொண்டவன் நான். எப்பொழுதுமே நான் என் அறிவு என்ன சொல்கிறது என்பதைப் பற்றித்தான் சிந்தித்து வந்தேனே தவிர எந்த ஆதாரம் எப்படிக் கூறுகிறது என்பதை நான் எண்ணிப் பார்த்ததே கிடையாது. திருக்குறளைப் பற்றிக் கூட, திருக்குறளைப் போல நான் நடக்கிறேன் என்று நினைத்துவிடாதீர்கள். என் கருத்துப்போல திருக்குறள் இருக்கிறது அதனால்தான் அதை ஒத்துக்கொள்கிறேன் என்பதை மனதில் வையுங்கள். ஆமாம்! இப்போதுகூட ஏதாவது இரண்டு குறட்பாக்கள் என் கருத்துக்கு ஏற்றனவல்ல என்று தோன்றினால் அந்த இரு பாட்டுகளையும் கிழித்து எறி என்றுதான் சொல்வேனே தவிர திருவள்ளுவரே சொல்லிவிட்டாரே எப்படி எதிர்ப்பது என்று சிறிதும் தயங்கமாட்டேன்." என்று தொடங்கி, **பெரியார்**, குறள் எங்ஙனம் பகுத்தறிவுக்கேற்ற பெருநூலாக

வருந்துகிறோம்

ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் மூண்ட இந்திப் போரில் சிறை புகுந்து உயிர் நீத்த வீரன் நடராசனின் தாயார் சென்ற கிழமை இயற்கை எய்தினார் என்பதறிந்து மிகவும் வருந்துகிறோம்.

விளங்குகிறது என்பதைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டினார். பேச்சு மிகவும் சுவை நிரம்பியதாகவும் கருத்துச் செறிவு மிக்கதாகவும் இருந்தது.

பெரியார் பேச்சுக்குப் பிறகும் அண்ணாவின் உரைக்கு முன்புமாக **நகைச்சுவை அரசர் என் எஸ் கிருஷ்ணன்** சொற்சுவை விருந்து மாநாட்டவர்க்குக் கிடைத்தது. "தமிழிலே இனிமே வார்த்தைகளே கிடையாது. இருக்கிற வார்த்தைங்க எல்லாத்தையும் ஐயா அவர்கள் பேசிட்டு போயிட்டாங்க நான் பேசறதுக்கு என்ன இருக்குது இனிமேல்!" என்று முதல் வாக்கியத்தை என். எஸ். கே. தொடங்கினார். அவ்வளவுதான்! சிரிப்பு கொட்டகையை அதிரச் செய்துவிட்டது. "குறளைப் பத்தி எதாவது சொல்லலாம்னு பார்த்தா எனக்கு அதைப்பத்தி ஒண்ணும் தெரியாது. திருவள்ளுவர் வாழ்க்கையைப் பத்தி எதாச்சும் சொல்லலாம் அப்டீன்னு பார்த்தா வள்ளுவர் வாழ்க்கேன்னு இப்ப சொல்லப்படறதெல்லாம் வெறும் கற்பனை அது கூடாது என்று சொல்லிட்டாங்க. அப்பறம், நான் என்ன தான் பேசறது? நான் கேக்கிறேன், நான் என்னதான் பேசறது?" என்று நகைச்சுவை மன்னர் கேட்டபோது மக்கள் மன்றத்தில், களிப்பு, குதித்துக் குதித்துக் கூத்தாடலாயிற்று. அவர் செந்தமிழ்ச் சொற்களை நகைச்சுவைத் தேனில் தோய்த்தெடுத்து வீச வீச மகிழ்ச்சி அலைகள் மாநாட்டில் மேலும் மேலும் மோதலாயின.

* * *

சென்னையில் சென்ற சனி ஞாயிறு இரண்டு நாட்களும் திருவள்ளுவர் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் தலைவர்: பன்மொழிப் புலவர் **மீனாட்சி சுந்தரனார்.** இரண்டாம் நாள் தலைவர்: பேராசிரியர் **சக்கரவர்த்தி நயினார்.** இரண்டு நாட்களிலும் **பேராசிரியர் இலக்குவனார், அறிஞர் அப்பாதுரை, திருக்குறள் முனிசாமி, ஆசிரியர் குருசாமி, புலவர் குழந்தை, பேராசிரியர் இராசமாணிக்கம், நண்பர்கள் நெடுஞ்செழியன்—அன்பழகன்** ஆகியோர் திருக்குறள் தமிழரின் கலங்கரை விளக்கம் என்பதை நன்கெடுத்துக் காட்டினர். ஆண்டு எழுபது ஆனாலும் தமிழ்க்காதல் மிகக் கொண்டு, மாநாட்டிற்குப் போந்து, திருக்குறள் ஆரியமயம் ஆகாத ஆரிய நூல் என்பதை மறுக்க முடியாத சான்றுகளுடன் விளக்கிக் காட்டிய **நாவலர் பாரதியார்** அவர்கட்கும், உடல்வளம் குன்றி படுக்கையிற் சுருண்டுகிடந்து மருந்தருந்தி வாழும் நேரத்திலும் மக்கட் பணிபுரியும் ஆர்வத்தின் காரணமாக எப்படியோ மாநாட்டிற்கு வந்து சொற்பொழிவாற்றவும் செய்த **தலைவர் திரு. வி. க.** அவர்கட்கும் தமிழகம் என்றும் நன்றி பாராட்டும்.

* * *

இரண்டாம் நாள் தலைவர் **பேராசிரியர் சக்கரவர்த்தி நயினார்** அவர்கள் ஆற்றிய விரிவுரை, திருக்குறள் என்பது ஆரிய எதிர்ப்பு நூலே என்னும் நம் கருத்தினைப் பெரிதும் அரண் செய்வதாகவும், அந்தக் கருத்தினை வலியுறுத்துவதற்கான எண்ணற்ற ஆதாரங்களை நமக்குத் தருவதாகவும் அமைந்திருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கது.

* * *

மாநாட்டின் முடிவில் அறிஞர் திரு. வி. க. அவர்கள் தலைமையில் கா. அப்பாதுரை, இரா. நெடுஞ்செழியன், புலவர் இலக்குவனார், திருக்குறள் முனுசாமி ஆகியோரைக் கொண்ட ஓர் அறிஞர் குழு அமைக்கப் பட்டு, திருக்குறளுக்குப் புது துறை காணும் நற்பணி அக்குழுவினரிடம் தரப்பட்டுள்ளது.

* * *

திருக்குறள் புதிய தமிழகத்தை உருவாக்குவதற்கு நாம் பெற்ற வழிகாட்டி என்பதை சென்னை திருவள்ளுவர் மாநாடு எழிலுற விளக்கிவிட்டது. இனி, தமிழகம் எங்கணும் குறள்நெறி ஓங்குவதற்கான வழிவகைகளைத் தமிழர் வகுப்பாராக.

(1-ம பக்கத் தொடர்ச்சி)

கம் தோன்றியது, வளர்ந்தது, எப்படி எப்படியோ சென்றது, நானும் பெரியாரும் பலமுறை பேசிட்டோம். ஆனால் அக்காலத்திலேயே நான் சொல்லியதுண்டு இத்தகைய SYNTHESIS ஏற்படப் போவது உறுதி உறுதி உறுதி என்று!

யார் என்ன கூறினும் கூறுக, பெரியாருடைய இயக்கம் — அறிவியக்கம், நாடுகளின் எல்லையை, மொழிகளின் எல்லையை, சாதிகளின் எல்லையை, சமயங்களின் எல்லையை, இனங்களின் எல்லையை எல்லா எல்லைகளையும் கடந்தது. அது உலக இயக்கம் உலகப் பொது இயக்கம்.

பெரியார் இன்று குறளைக் கையில் ஏந்தியுள்ளார். பலப்பல நூல்களை ஒதுக்கிக் கொண்டே வந்த பெரியார் குறளை மட்டும் கையில் ஏந்தியிருக்கும் காரணம் என்னை? தலையாய காரணம் என்னை? பெரியாரின் இயக்கம் உலகப் பொது இயக்கம். திருக்குறள் உலகப் பொது நூல். பெரியாரின் உலகப் பொது இயக்கத்திற்கு ஏற்ற உலகப் பொது நூல் திருக்குறளே. எனவேதான் அது பெரியாரின் கையிலே வீற்றிருக்கிறது.

யார் யாரோ குறளைப் போற்றினார்கள், பாராட்டினார்கள். ஆனால் அவர்கள் தொண்டின் பயனெல்லாம், குறள், தனக்கு உரிய இடத்தை அடைந்திற்றில்லை. இன்று பெரியார் குறளை ஏந்தியிருக்கிறார். இனி மிக விரைவில் குறள தன் சிறப்பிடத்தை எய்துவது உறுதி உறுதி.

இச் சில உரைகளோடு செய்கைத் தலைவன் நான் இறங்கிவிடுகிறேன். இயற்கைத் தலைவர் பெரியார் இதோ வருகிறார். அவர் நன்மொழி கேளுங்கள். உடல் நிலை காரணமாக நான் தொடர்ந்து இருக்க இயலாமைக்கு மன்னியுங்கள், மன்னியுங்கள். வணக்கம்.

தமிழகத்தின் இயற்கைத் தலைவர்
பெரியார் இராமசாமியே!

★

பெரியாரின் உலக இயக்கத்திற்கு ஏற்ற உலக நூல் திருக்குறளே!

★

சென்னை மாநாட்டில் அறிஞர் திரு. வி. க.!

ஈண்டு கடலெனக் குழுமியிருக்கும் என் அருமைத் தோழர்களே, உங்கள் அனைவர்க்கும் என் வணக்கம் உரியதாக, ஆக.

அறிக்கையிற் குறிப்பிட்ட வண்ணம் இதுபோது வரவேற்புரை நிகழ்த்தல் வேண்டும். என் கெழுதகை நண்பர் பெரியார் அவர்களும் உங்கள் தோழர்கள் பலரும் மாநாட்டு அமைப்பாளர்களும் என்னை இம் மாநாட்டு வரவேற்புத் தலைவனாக ஆக்கினர். யானும் இப் பேற்றினை விருப்புடன் ஏற்றேன். ஆனால் இயற்கை அன்னையோ வேறு வகையாக விதித்துவிட்டனள். என்னை, நான்கு நாட்களாக, வலிமையைக் குறைத்து, படுக்கையிற் கிடத்தி, மிகவும் ஒறுத்துவிட்டனள். படுக்கையினின்று நேரே இம் மாநாட்டிற்குப் போந்துள்ளேன். ஈண்டு அமர்ந்த பின்னர், ஆற்றல் இழந்துகிடந்த எனக்கும் புது ஆற்றல் கிளர்ந்து எழுவதுபோல் தோன்றுகின்றது.

நேற்று, பெரியார் அவர்கள், என்னை வந்து கண்டஞான்று, என் நிலைகண்டு மிகவும் வருந்தினார்கள். "ஏதும் பேச வேண்டாம், மாநாட்டிற்கு வந்துவிட்டுப் போனால் போதும்" என்று குறிப்பிட்டார்கள். யானும் அந்த எண்ணத்தோடுதான் ஈண்டுப் போந்தேன். ஆனால் இங்கு வந்த பின்னர் என் உள்ளத்தே ஏற்பட்டுள்ள எழுச்சி சில உரைகளேனும் பகர்க என்று என்னைக் கட்டளையிடுகின்றது. எனவே பத்து நிமிடங்களேனும் பேச முயல்கிறேன். அதிகம் பேச இயலாமைக்கு மன்னிக்க, மன்னிக்க.

வரவேற்புத் தலைவன் என்னும் முறையில் உங்கள் யாவரையும் வரவேற்கும் பேறு பெற்றமை குறித்து இறும்பூது எய்துகின்றேன். "வருக வருக, அனைவரும் வருக, உங்கள் வரவு நல்வரவு ஆகுக" என நல்லுரை பகர்கின்றேன். உங்கள் அனைவரின் நன்முயற்சியானும் ஒத்துழைப்பானும் மாநாடு செவ்விதின் நிகழுமாக.

முன்னர் எல்லாம், திருக்குறள் மாநாடு என்று கூட்டி, நுழைவுச் சீட்டு என்று வைத்து, டிக்கட் என்று சொல்லி, பணம் வாங்கிக் கொண்டுதான் உள்ளே விடுவது என்று தொடங்கினால் திருக்குறளின் அருமை பெருமைகளைப் பற்றிய விரிவுரைகளைச் செவிமடுக்க பத்துப் பேர்தான் வருவர். ஆனால், இன்று, ஈண்டு, நுழைவுச் சீட்டு பெற்று, இத்துணைப் பெருங் கூட்டம், ஈண்டி மிடைந்து செறிந்து துதைந்து நிற்கும் காட்சியைக் காண்கின்றோம். இது, காலை வேளை; மாட்டுப் பொங்கல் மனைகள் தோறும் கொண்டாடப்படும் நேரம். இதுபோதே இவ்வளவு பெருங் கூட்டம் செறிந்து கிடக்கின்றது எனில் இன்று மாலையும் நாளையும் கூட்டம் எத்தகு காட்சி வழங்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? திருக்குறளின் சிறப்பை விளக்க இவ்வளவு பெருங் கூட்டம் ஈண்டி நிற்கும் காட்சி ஏற்பட்டிருப்பது யாரால்? எவருடைய இயக்கத்தால்? இக்கேள்விகளின் விடையை எவரும் அறிவர். விரிவுரை வேண்டுவதில்லை.

இது திருக்குறள் மாநாடு. திருக்குறளைப்பற்றி யார் யாரோ ஏதேதோ உரைகளைக் கண்டிருக்கின்றனர். பலரும் பலவகையாக திருக்குறளை நோக்கியிருக்கின்றனர். அவை யெல்லாம் போக. அவர்கள் பழங்காலத்தில் நின்று கொண்டு குறளை நோக்கினர். ஆகவே அவர்கள் உரையில் பழமை பொதுள்வது இயல்பு. இதுவோ புதுமை மலர்கிற காலம். எனவே புத்துலகத்திற்கு ஏற்ற வண்ணம் குறளை நோக்க வேண்டுவது நம் கடமை.

ஆதி பகவன் கதைபற்றி பாரதியார் அவர்கள் ஒன்று கூறினார்கள். ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற பார்ப்பனனுக்கும் பிறந்தவரே வள்ளுவர் என்ற கதை பொய்க்கதை என்று குறிப்பிட்டார்கள். அக் கதை பொய்க்கதை மட்டுமன்று, இருநூறு ஆண்டுகட்கு முன்னேதான் புனையப்பட்ட கதை. இந்த உண்மையை எனக்குப் புலப்படுத்தியவர்கள் காலஞ்சென்ற பாம்பன் சுவாமிகள். இருநூறு ஆண்டுகட்கு முன்னர் திருத்தணியில் இருந்த இரண்டு வீர சைவப் புலவர்களே இக்கதையை முதன் முதல் புனைந்தவர்கள் ஆவார்கள். திருக்குறளை முதன் முதல் அச்சில் பதித்தவர் ஆறுமுக நாவலர். நாவலர் பதிப்பில் இக் கதை கிடையாது என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

ஆதிபகவன் கதையைப் புனைந்தவர்கள் திருத்தணிப் புலவர்கள் என்றால் அந்தக் கதைக்கு உயிர் ஊட்டி உணர்வூட்டி வளர்த்தவர் யார் தெரியுமா? சென்னைப் பல்கலைக் கழகத்தார்கள். அவர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

22—1—49 சனிக்கிழமை

பெரியார் அளித்த பரிசு!

சென்ற கிழமை, தமிழகம் எங்கணும், அல்ல—தமிழர் வாழும் தரணி எங்கணும், அல்ல அல்ல—தமிழ் நெஞ்சம் தன் உயர்பண்பு குன்றாது ஒளி வீசித் திகழும் ஒவ்வோரிடத்திலும், பொங்கற் புது நாள், பூரிப்புடன், புது மகிழ்ச்சியுடன், புத்தம் புதியதோர் உவகையுடன், நேரிற் கண்டு மகிழத்தான் முடியுமே தவிர சொற்கள் எனும் தூதுவரின் வாயுரை கேட்டு விளங்கிக்கொள்ள முடியாததோர் இன்பப் பெருக்குடன் கொண்டாடப் பட்டிருக்கும். ஆம்! புதுப் பொங்கல் பொங்கிய அந்த வேளையில் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் மாங்குயில் கூவிடும் ஓர் பூஞ் சோலையாக, இன்பம் துதைந்திடும் ஓர் சுவைமிகு தேன் கூடாக, தன் ஒவ்வோர் அணுவிலும் ஓராயிரப் பொருளை நடனமிடச் செய்யும் அரியதோர் அழகின் சின்னமாக நிச்சயம் காட்சி தந்தேயிருக்கும். நாம் அறிவோம், மிக நன்றாக அறிவோம், பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் வறுமைக் குளவி நாள் தோறும் கொட்டியவண்ணம் உள்ளது என்னும் பரிதாப உண்மையை! வறுமை என்னும் வாணலியில் வறுக்கப்பட்டவண்ணம்தான் உள்ளன தமிழ்க் குடும்பங்கள் என்றபோதிலும், வாழ்க்கையின் முழு இன்பத்தை சுவையை முழுப்பொருளை உணரமுடியா வண்ணம் பல குடும்பங்கள் பட்டினி பசி பஞ்சம் என்னும் இந்த இருட்டறைகளிலேயே உலவ வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையிலேயே இருக்கின்றன என்றபோதிலும், அளவரசி மக்கிப்போன அரிசி, புழுத்துப்போன அரிசி, இருட்டுச் சந்தை அரிசி, சமைக்கவே முடியாத பங்கீட்டரிசி இவற்றையெல்லாம் கொண்டுதான் தமிழகம் இந்த ஆண்டு பொங்கற் புதுநாளைக் கொண்டாட வேண்டியிருந்தது என்ற போதிலும், குடந்தை மண்ணில் உரிமை என்னும் உன்னத இலட்சியத்தை நிலைநாட்டுவதற்காக இளந்தமிழ்க் காளைகள் கொட்டிய குருதி தமிழர்தம் உள்ளத்தெல்லாம் என்றும் மறையாத வடுவொன்றை ஏற்படுத்திவிட்ட வேளையிலே வந்த பொங்கல் இது ஆகவே இப் பொங்கலில் துக்கம் நிச்சயம் தோய்ந்திருக்கும் என்ற போதிலும், பொங்கல், தமிழகம் பெற்றுள்ள ஒரே ஒரு திரு நாள், விழா நாள், தனித் தமிழ் இன்ப நாள், நன்னாள், பொன்னாள், புத்தாண்டுத் தொடக்க நாள், ஆரியம் என்னும் நஞ்சு தோயாத முழுதும் பழுதற்ற முத்தமிழ்ப்பண்பு நாள், உழவின் மேன்மையை உழைப்பின் சிறப்பை உழுவோர்தம் உயர்வை உலகுக்கெல்லாம் எடுத்துரைக்கும் உன்னத நாள் எனவே இந்த நாள் தமிழர் அனைவராலும் பெருமகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டே இருக்கும்—வேறு துக்கங்கள் குறைகள் வறுமைத் தழும்புகள் ஆளவந்தார்களின் கொடுமைகள் இன்னபிற ஆயிரம் இருந்தாலும்!

தீபாவளியா—அதிலே நினைத்துப் பார்க்கவே முடியாத அருவறுப்புக் கருத்துகள் நிறைந்து கிடக்கின்றன. கார்த்திகை விழாவா—ஆரியக்கலப்பு அதில் மிக அதிகம். தசராவா—பெயரே வடமொழி. விநாயகர் சதுர்த்தியா—அதுவும் தமிழல்ல! மாளய அமாவாசையா—சொல்லும்போதே நம் உள்ளத்தில் வெறுப்புணர்ச்சி ததும்புகிறது, ஆயுத பூஜையா—கருவிகளைப் பூஜிக்கும் அளவு 'பூஜ்ய' மனப்பான்மை படைத்தவன் அல்லன் தமிழன், சிவராத்திரியா வைகுண்ட ஏகாதசியா துர்க்கா பூஜையா நவராத்திரியா—அத்தனையும் ஆரியர் வஞ்ச நினைப்புடன் வண்டமிழர் இடையே நுழைத்த சூது நெறிகள். எனவே பொங்கல் ஒன்றுதான், தமிழகம், தன்னுடையது, ஆரிய நஞ்சு கலவாதது, வடவர் மொழிவழி செல்லாதது, பொய்ப் புராண ஏடுகளின் புனைந்துரைக் கடலில் மூழ்காதது என்றெல்லாம் தலை நிமிர்ந்து நின்று இறுமாப்புடன் உரைக்கத்தக்க உயரிய விழா.

பொங்கல், உழைப்பின் மேன்மையை விளக்கும் விழா, தனித் தமிழ் விழா, அதுமட்டுமல்ல தமிழர்தம் புத்தாண்டுத் தொடக்க நாள் விழாக்கூட! தமிழர்க்கு ஆண்டு தொடங்குவது தை முதல் நாள்தான். தை மாதமே தமிழ் ஆண்டின் முதல் மாதம்—சித்திரை அல்ல. சித்திரை முதல் நாளை தமிழ் ஆண்டு முதல் நாள் என உரைத்தது பின் நாளில் வடவாரியர் செய்த சூது. தமிழர்கள் கொண்டாடும் ஏனைய பண்டிகைகள் யாவும் நட்சத்திரத்தைக் கொண்டே கணிக்கப்படுவன—தேதியைக் கொண்டல்ல. ஆனால் பொங்கலுக்கோ நட்சத்திரம் கவனிக்கப்படுவதேயில்லை—தேதிதான் முக்கியம். எந்த நட்சத்திரமாயினும் ஆக, **தை முதல் நாள்** பொங்கல் நாள் என்பதே தமிழர் மரபு. பிற ஆரியப் பண்டிகைகள்போல் நட்சத்திரத்தைக் கொண்டு கணிக்கப்படாமல், தேதியைக் கொண்டே பொங்கல் விழா கணிக்கப்படும் இது ஒன்றே போதும், பொங்கல், தமிழர் விழா என்பதை எடுத்துக்காட்ட! அதுவேபோல, தை முதல் நாள் என்று அந்த முதல் நாளுக்கு முக்யத்துவம் கொடுத்திருப்பதே போதும் பொங்கல் புத்தாண்டுத் தொடக்க நாள் என்பதை விளக்க!

தமிழகத்தின் தனிச் சிறப்பு உழவு—அந்த உழவின் உயர்வை விளக்கும் திருநாள் **பொங்கல்**. உழைப்பின் மேன்மையை உழைப்பவர் திறத்தைப் போற்றுவது தமிழர் பண்பு—அந்தப் பண்பு விளக்கம், **பொங்கல்** ஆரியம் சிறிதும் கலவாத அரியதோர் விழா நாள் தமிழர்க்குத் தேவை—அத்தகு விழாவே **பொங்கல்** சித்திரை முதல் நாள் தமிழ் ஆண்டுப் பிறப்பல்ல என்பதை நீண்ட நாட்களாகவே அறிந்திருந்தனர் தமிழர் ஆனால் எது தமிழ் ஆண்டுத் தொடக்க நாள் என்பதை மட்டும் உணராதிருந்தனர், அதையும் ஐயம் திரிபு அற அறிந்துவிட்டனர் இந்த நான்கைந்து ஆண்டுகளாக—அந்தப் புத்தாண்டுத் தொடக்க நாளே **பொங்கல்!** ஆம் **உழவின் நன்னாள், உழைப்பவர் பொன்னாள், தமிழர் திருநாள், புத்தாண்டுப் புதுநாள் என்னும் இந்த நாள்**

விழாக்களும் ஒரு சேர அமைந்திருக்கும் ஒரு விழா, திரு விழா, ஒப்பற்ற விழா, பொங்கல்! எனவேதான் பொங்கற் புதுநாள் போந்தது எனக் கேட்டதும் தமிழகம் இதுபோல ஆநந்தத்தால் துள்ளிக் குதித்து "பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என வாயாரக் கூவி மனமார மகிழ்கிறது!

தமிழர் பண்பாட்டின் அருமையையும் பெருமையையும் அழகுற விளக்கத்தக்க ஆனால் ஆரிய மண்ணுக்கடியே மறைந்து கிடந்த காரணத்தால் தன் ஒளி மங்கிக் கிடந்த பல மோஹஞ்சதரோக்களை, பலப்பல மோஹஞ்சதரோக்களை, வரிசை வரிசையாக, தன்மான இயக்கம், இந்த இருபதாண்டுக் காலத்தில் தமிழர்தம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. சங்க இலக்கியங்களிலேயிருந்து கபிலர் அகவல் ஆபுத்திரன் அகவல் வரையில், இராவண காவியம் இரணியன் நாடகம்முதல் ஆரியமதத்திற்குச் சித்தர்கள் தந்த சாட்டையடி வரையில், "திருவாளர்"—"தோழர்" முதல் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" வரையில், சாதி மத பேதமற்ற 'சங்ககால சமுதாயத்திலிருந்து' வேத புராண இதிகாசப் புனைந்துரைகள் உலவாத தமிழ்வாழ்வு வரையில், நெடுஞ்செழியன் இமயவரம்பன் நெடுமாறன் இளம் வழுதி செங்குட்டுவன் திருமாவளவன் போன்ற எழில் மிகு பெயர்கள் முதல் தோழர்களே தோழியர்களே வரையில், ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக, சுயமரியாதை இயக்கம், மறைந்துபோன எத்தனை மாணிக்கங்களை முத்துகளை வயிரங்களை தங்கக் குவியல்களை எடுத்தெடுத்து அறிமுகப்படுத்தியிருக்கிறது தமிழகத்திற்கு! இந்த மோஹஞ்சதரோக்களை தமிழர் மன்றத்திலே கொண்டுவந்து நிறுத்துவதற்காக, இவற்றை மூடியிருந்த எத்தனை பெரிய ஆரியக் காடுகளையும் மேடுகளையும் வெட்டிச் சாய்க்க வேண்டியிருந்தது சுயமரியாதை இயக்கம்! எவ்வளவு அரும்பாடு பட்ட பிறகு சுயமரியாதை இயக்கம், இன்றைய தினம் கிடைத்துள்ள தமிழர் மறுமலர்ச்சி என்னும் விளைவைப் பெற்றிருக்க முடியும்! அந்த மறுமலர்ச்சியின் ஒரு பகுதியாக பொங்கல் விழா, தமிழர் திருநாளாக, தனிச் சிறப்புடன், அதன் முழுப் பொருளுடன், கொண்டாடப்படும் இன்றைய நிகழ்ச்சியைக் காணக் காண, சுயமரியாதை இயக்கம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது! அந்த மகிழ்ச்சிதான் எவ்வளவு நியாயமானது!

பொங்கல் விழா, சென்ற சில ஆண்டுகளாகவே, தன்மான இயக்கத்தவர்க்கு, இத்தகு பெரு மகிழ்ச்சியை அளித்துவருகிறது இந்த ஆண்டும் அளித்தது என்றபோதிலும் இவ்வாண்டுப் பொங்கல், இதுவரை இல்லாததோர் உவகை யுணர்ச்சியை, புத்தம் புதிய உவகையுணர்ச்சியை, சிந்திக்கும்போதே சிந்தையில் தேன் பாய்ச்சும் தகைமை படைத்த உவகையுணர்ச்சியை தன்மான இயக்கத்தவர்க்கு மட்டுமல்ல தமிழ் மக்கள் அனைவர்க்குமே அளித்திருக்கிறது. இத்தகையதோர் புதுக்களிப்பு இவ்வாண்டுப் பொங்கல் விழா கொண்டாடப்பட்ட ஞான்று தமிழர்க்கெல்லாம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், தளபதி அண்ணா அவர்கள் அழகுற மொழிந்திருப்பதுபோல, பொங்கல் விழாவின்போது, தமிழகத்தின் குடும்பத் தலைவர் போன்ற பெரியார், திருக்குறள் என்னும் ஒப்பற்ற கேடயத்தைத் தமிழர்க்கெல்லாம் அன்பளிப்பாக அளித்திருப்பதுதான். இத்தனை ஆண்டுகளாக, தமிழர், பொங்கல் திருநாளன்று உள்ளம் களித்து உண்டு மகிழ்ந்தது வெறும் வெண்பொங்கல் அல்லது சர்க்கரைப் பொங்கல். ஆனால் இந்த ஆண்டோ, பெரியார் அளித்த குறள் எனும் இன்சுவை அதிலே இரண்டறக் கலந்துநின்று பெறலரும் இன்பப் பேற்றினை தமிழ்த்திரு நாட்டவர்க்கு வழங்கியிருக்கின்றது.

குறள், எத்தனையோ ஆண்டுகளாக, ஏன், எத்தனையோ நூற்றாண்டுகளாகத்தான் தமிழகத்தில், இருந்து வருகின்றது. ஆனால் பெரியார் அவர்களின் அன்புமுத்திரை அதிலே பொறிக்கப்படும் இந்நாள் வரை, அது, புலவர்களின் வீட்டுப் பரணைமேல் தூங்கும் அலங்காரப் பொருளாகவோ அல்லது பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரீட்சைப் பாடமாக அமைந்து அவர்களை வேதனைப்படுத்தும் மனப்பாடல் பகுதியாகவோ அமைந்து கிடந்ததே தவிர, தமிழன் இதயத்தைத் தட்டி எழுப்பும் இன்னிசை கீதமாக அது மாறவில்லை. அது மாடமாளிகை கூடகோபுரங்களின் மீது உல்லாசபுரிப் பவனம் செய்து வரும்படி விடப்பட்டிருந்ததே தவிர ஏழைக் கந்தனையும் பாட்டாளி பரமனையும் வாழ்க்கையின் கூட்டாளிகள் ஆக்கும் அரிய செயலில் இறங்கும்படி விடப்படவில்லை. அது, ஒரு சில "பூர்ஷ்வா"க்களினுடைய தனி உடைமைப் பொருளாகச் சிறை வைக்கப்பட்டிருந்ததே தவிர தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவருடைய பொது உடைமைப் பொதுப் பொருளாக ஆக்கப்படவேயில்லை. எனவேதான், குறள், கிடைத்தற்கரிய கருவூலமாக இருந்துங்கூட, இதுவரை, குடத்திலிட்ட விளக்காகவே இருந்து வந்தது. ஆனால், இனி, குறள், தமிழகம் எங்கணும் பவனிவரும் என்பது உறுதி. பெரியார், குறளை தன் கரத்திலே ஏந்தியிருக்கிறார் எனில் அது சாதாரண சம்பவமல்ல. பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல, லெனின், காரல் மார்க்சை கரத்திலே ஏந்ினரே அதுபோன்ற அரிய நிகழ்ச்சி அது. லெனின் மார்க்சை ஏந்தியதன் விளைவு சோவியத் ரஷ்யா! பெரியார் குறளை இன்று ஏந்துகிறார் எனில் அதன் விளைவு சோவியத்தின் சோபிதத்தையும் மிஞ்சக்கூடிய இன்பத் திராவிடமாக இல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்?

பெரியார், தமிழகத்தின் தந்தை, குறளை இவ்வாண்டுப் பொங்கல் பரிசாகத் தமிழருக்கு அளித்திருக்கிறார். இதோ, குறள், முகிலைக் கிழித்துக் கொண்டு வெளிவரும் முழு மதியைப்போல, தமிழ் வானில் கம்பீரமாக "உலா" வரத் தொடங்கிவிட்டது. அதன் பால்நிலவு இனி வீசாத இடம் இருக்காது. அதன் குளிர்ச்சிக்கும் இனிமைக்கும் மயங்காத தமிழர்களும் இனி இருக்கமாட்டார்கள். அந்த நிலவொளியிலே புதிய தமிழகம் நிழலாடுவதை காணக் கண் படைத்த எவரும் இனிக் காணாமல் இருக்கமுடியாது. "அழகு நிலா—நல்ல முழுமை நிலா முளைத்தது விண்மேலே! பழமையிலே புது நினைவு பாய்ந்தெழுந்தாற்போலே!' என்று இன்னிசைக் கீதம் இசைக்காத தமிழனையும் இனிக் காணமுடியாது. சிந்திக்கும் திறமோ, அன்றித் தமிழ்ச் சுவையின் இனிப்போ, அன்றேல் புதுவாழ்வின் கனமோ அறிந்தார் வாழும் இடத்தெல்லாம் இனி, குறள், தன் ஒளி

(9-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுதோறும் தமிழ்ப்பாட புத்தகத்தில் குறள் உரைப் பகுதியில் இந்தக் கதையை எழுதி எழுதி எழுதி எழுதி இதனை நிலைநாட்டி விட்டார்கள். இந்தக் கதை பொய்யுரையே என்பதனை பாம்பன் சுவாமிகள் செவியறிவுறூஉ என்னும் தம் நூலில் நன்ருக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஏதோ நேற்றுவரை பழைய உலகத்தில் இக்கதையைப் பாராட்டினுர்கள். போகட்டும். இனி, புதிய உலகத்தில், இக் கதை நடமாடல் ஆகாது. இக் கதை மட்டுமல்ல, இக் கதை போன்ற இதனுடன் தொடர்பு தொண்ட வள்ளுவர்பற்றிய ஏனைய பல கதைகளும் நடமாடல் ஆகாது.

ஓர் உண்மையை, நாம், நன்ருக அறுதியிட்டுக் கூறலாம். நம் நாட்டிலே பழம் புலவர் எவருக்கும் வரலாறு என்பது கிடையாது; கிடையாது; கிடையாது. பழம் தமிழ்ப் புலவர் எவரும் தம் வரலாற்றைத் தாமே எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தனரில்லை. புலவர்களின் வரலாற்றை பிறர் எழுதும் வழக்கமும் அந்நாளில் இல்லை. எனவேதான் பழந்தமிழ்ப் புலவர் எவருடைய வரலாற்றையும் நாம் அறிதல் இயலவில்லை.

பழந் தமிழ்ப் புலவர் எவருக்கும் வரலாறு கிடையாது—திருவள்ளுவருக்கும் கிடையாது. திருவள்ளுவர் எங்கே பிறந்தார், எங்கே வளர்ந்தார், எப்படி வாழ்ந்தார்? இவற்றிற்குத் தக்க விடை கூறுதல் இயலாது. அவர் பிறந்த நாடு எது? சிலர் சோழநாடு என்பர். சிலர் தொண்டைநாடு என்பர். சிலர் சோழநாடு என்னும் அமைப்பு அக்காலத்தில் இருந்ததா என்பதையே ஐயுறுவர், வடார்க்காடு மாவட்டத்தில் வந்தவாசிக்கருகே உள்ள ரத்னகிரி என்னும் இடத்தில் பிறந்து, சென்னைத் திருமயிலையில் வளர்ந்து, மீண்டும் ரத்னகிரிக்கே சென்று சமாதி அடைந்தார் என்றும் சிலர் சொல்கின்றுர்கள். ரத்னகிரி மலையில் ஒரு திருவடி காணப்படுகின்றது. இதனைத் திருவள்ளுவர் திருவடி என்றும் கூறுவர், இவை எல்லாம் உண்மையா என்பதை அறிவதற்கு வாயில் ஏதுமில்லை. ஏனைய பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கையைப்போலவே திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறும் தெரியவில்லை என்று சுருங்கிய முறையில் கூறுவதே சாலப் பொருத்தமுடையது ஆகும்.

அவருடைய வாழ்க்கை வரலாற்றினை நம்மால் அறிதல் இயலவில்லை என்றுலும், அவர் கல்வி கேள்வி அறிவு ஆராய்ச்சிகளிற் சிறந்தவராக இருந்தார் என்பதையும், திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை இனிது நிகழ்த்தினுர் என்பதையும், பிள்ளைப்பேறு உடையவராக இருந்தார் என்பதையும், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் உயரிய நெறியைக் கடைப்பிடித்தொழுகினுர் என்பதையும், அவர் நமக்கு அளித்துள்ள திருக்குறள் நூலிலிருந்தே நாம் நன்கு அறியலாம். திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு திருக்குறளே. திருக்குறளைப் பயின்று பயின்று அதன் உள்ளுறையை உணர உணர திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு நமக்கு மேலும் மேலும் விளங்குவதாகும்.

திருவள்ளுவர் தமிழர். திருக்குறளைத் தமிழில் எழுதினுர். இது உறுதி மிக உறுதி முழு உறுதி. ஐயமில்லை. இது உண்மை என்பதை அறுதியிட்டுக் கூறலாம். ஆனல் குறள், தமிழ் நூல் அன்று, தமிழர் நூல் அன்று, உலக நூல், உலகப் பொதுநூல், சமதர்ம நூல். குறள் காட்டும் நெறி தமிழருக்கு மட்டும் ஏற்புடையதோ? ரஷ்யருக்கு அது ஏலாதோ? இங்கிலாந்திற்கு அது ஏலாதோ? ஜர்மனிக்கு அது ஆகாதோ? ஜப்பானுக்கு அது ஆகாதோ? எந்த நாட்டுக்கு அது ஒவ்வாது? எந்த இனத்திற்கு அது ஒவ்வாது? குறள் பொது நூல். உலக நூல்.

குறளைப் படிக்கு முன்னர், படிப்பவர், Sexual Science (பால் அறிவு) பெற்றவராதல் வேண்டும். ஆண் பெண் சேர்க்கை பற்றிய விஞ்ஞான அறிவின்றி திருக்குறளைப் பயின்ருல் குறளின் முழு உண்மையையும் உணர்தல் அரிது; அரிது.

குறளைப் பயிலும் முன்னர் மார்க்கிசமும் அறிந்திருத்தல் வேண்டும். மார்க்கிசம் (Marxism) அறியாமல் குறளைப் பயின்ருல் பயனே இல்லை.

மக்கள் கூடி வாழப் பிறந்தவர்கள்; பிரிந்து வாழப் பிறந்தவர்கள் அல்லர். இதுதான் மார்க்ஸ் தத்துவத்தின் அடிப்படை. குறள் நூலின் அடிப்படையும் இதுதான்.

ஒருவனும் ஒருத்தியும் சேர்கிறபோது குடும்பம் உருவாகிறது. இது ஆண் பெண் சேர்க்கை. ஆண் பெண் சேர்க்கை குடும்பமாகிறது. குடும்பங்களின் சேர்க்கை தெருவாகிறது. இப்படியே சேர்க்கை வளர்ந்து வளர்ந்து தெரு ஊராகி, ஊர், நாடாகி, நாடு, உலகமாகிறது. ஆகவே உலகம் முழுவதையும் ஒன்று சேர்க்கும் தத்துவம் இந்த சேர்க்கைத்தத்துவமே. இது மார்க்சியம். இதனை உணர்பவர் திருக்குறளை எளிதில் உணர்வர்.

இந்த மார்க்ஸ் தத்துவத்தை—திருக்குறள் தத்துவத்தை—சேர்க்கைத் தத்துவத்தை—ஆண் பெண் தொடர்பைப் பாவம் என்றனர் ஒரு சாரார். இந்தப் பாழுங் கொள்கையை ஏற்றபோதுதான் தமிழனுக்கு வந்தது கேடு. ஆண் பெண் சேர்க்கை பாவம் என்னும் போலித் துறவு தமிழகத்தில் என்று நுழைந்ததோ அன்றே தமிழ்நாடு கெட்டது; தமிழன் கெட்டான்; தமிழனின் வாழ்வியலும் கெட்டது.

இனி நான் தொடர்ந்து பேசுதற்கில்லை இதோ மார்பு வலியும் வந்துவிட்டது. இதுவரை யான் நிகழ்த்தியது வரவேற்புரை அன்று வரவேற்புரையின் தோற்றுவாய் மட்டுமே! வரவேற்புரை இனி நிகழும். அதனை நிகழ்த்த இருப்பவர்

பெயர் சூட்டு

அருப்புக்கோட்டை தியாகராய வாலிபர் சங்க செயலாளர் சு. காளிமுத்து அவர்களின் மூன்று மாத பெண் குழந்தைக்கு தைப் பொங்கலன்று தமிழரசி என்று பெயரிட்டதன் நினைவாக "போர்வாள்" வளர்ச்சிக்காக ஒரு ரூபாய் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

(வரப்பெற்றேம்: நன்றி.)

உங்கள் இயற்கைத் தலைவர்—தமிழகத்தின் இயற்கைத் தலைவர் பெரியார் அவர்களே ஆகும்.

இம் மாநாட்டின் இயற்கை வரவேற்புத் தலைவர் பெரியார் அவர்களேதான். என்னை, செயற்கை, வரவேற்புத் தலைவராக்கிற்று. அந்த செயற்கையை இயற்கை தடுத்துவிட்டது.

நான் சண்டைக்காரன்; போராட்டக்காரன். பெரியாருடன் பன்முறை போரிட்டவன். நன்றாகப் போரிட்டவன். சளைக்காமல் போரிட்டவன் நான் ஒளித்தோ மறைத்தோ பேசுகின்றேனில்லை. பெரியார் அவர்களுடன் பலமுறை போராடியிருக்கின்றேன். ஆனால் இன்றோ ...

சில சமயங்களில் நான் THESIS (தத்துவம்) ஆக இருந்திருக்கிறேன்; அவர் ANTI-THESIS (எதிர் தத்துவம்) ஆக இருந்திருக்கிறார். சில சமயங்களில் நான் ANTI-THESIS ஆக இருந்திருக்கிறேன். அவர் THESIS ஆக இருந்திருக்கிறார். ஆனால் இப்போதோ THESIS (தத்துவம்) ANTI-THESIS (எதிர்த் தத்துவம்) இரண்டும் மறைந்து SYNTHESIS, ஒருமைப்பாடு, ஏற்பட்டிருக்கிறது.

பெரியாருடைய அறிவியக்கம், புரட்சி இயக்கம், பகுத்தறிவியக்

(4-ம் பக்கம் பார்க்க)

(7ம்-பக்கம் தொடர்ச்சி)

வீசித் திகழ்வது உறுதி. பொதுவாகத் தமிழ் இளைஞர் ஏறுகளும், குறிப்பாக தன்மான இயக்கப் படையினரும், திருக்குறளை, இனி பட்டி தொட்டிக்கெல்லாம் அழைத்துச் செல்வர்; நாடு நகரங்கட்கெல்லாம் அழைத்துச் செல்வர்; தமிழர் வாழும் தரணிக்கெல்லாம் அழைத்துச் செல்வர்; இம் மலர்தலை உலகம் முழுவதும் ஓர் பொதுவுடைமைப் பூமியாக மலர வேண்டும் என்ற உயர்நோக்கு படைத்தார்தம் உள்ளத்திற்கெல்லாம் அழைத்துச் செல்வர். பெரியாரின் குரல் ஓசை கேட்ட இடத்திலெல்லாம் இனி வள்ளுவரின் குறள் ஓசையும் கேட்கும். தன்மானப் படைவீரர் பகுத்தறிவுப் போர் புரியும் இடத்திலெல்லாம் இனி திருவள்ளுவர் திருக்குறளும் புரட்சிக் கருத்துக்களைத் தூவும் புனிதப் பணி புரியும். ஒரு சமயம், எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்று, திருக்குறள், புரட்சிக்கருத்தைப் பொழியும். உடனே, சுயமரியாதை இயக்கம், ஆம் ஆம் என் கருத்தும் அதுவேதான்—ஆண்டவனே சொன்னாலும் அதை ஆராயாது ஏற்காதே என்று இடியோசை கிளப்பும் மற்றோர் சமயம், “இந்த உலகிலே இவ்வளவு வறுமையா? இவ்வளவு பசிக் கொடுமையா? இவ்வளவு அநீதியா? இவ்வளவு அக்கிரமமா? வலியோர் சிலர் எளியோர்தமை வதையே புரிகுவதா? அடுக்குமா இது? இப்படிப்பட்ட உலகத்தையா படைத்தான் ஆண்டவன்? ஒழி அவனை!” என்று தன்மான இயக்கம் முரசொலி எழுப்பும். உடனே அருகிருந்து ஓர் குறள் ஒலி எழும்பும் “இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்” என்று! “ஏனப்பா இந்த ஜடாமுடி? ஏனப்பா உருத்திராக்ஷம்? ஏனப்பா இந்த திருப்பதி மொட்டை? இதனால் எல்லாமா ஆண்டவன் அருள் பெற முடியும்? நன்மையைச் செய்! நல்லவனாக நட! அறவழி நில்! அதுபோதும். இந்த வெளிவேஷம் வேண்டாம்!” என்று சுயமரியாதை இயக்கம் அறிவுரை புகலும். உடனே, குறள், “உண்மையே தன்மான இயக்கம் இயம்புவது! மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்” என்று உரத்த குரலில் பேசும்! குறளைவிட அரிய தோழன் தன்மான இயக்கத்திற்குக் கிடைக்கமாட்டான். தன்மான இயக்கத்தைவிட நம்பிக்கை மிக்க நண்பன் திருக்குறளுக்கும் கிடைத்தல் அரிது. எனவே இந்த **குறள்—சுயமரியாதை கூட்டு முன்னணி**, பலம் மிக்கதாகவும், பகைவர் திறத்தை தொகையாக எதிர்நிறுத்தித் தூள்தூள் ஆக்கும் மறம் செறிந்ததாகவும், நம் இனிய தாய்நாட்டின்மீது படர்ந்துள்ள ஆரிய மாயையை முற்றிலும் விலக்கும் அரிய ஆற்றல் நிறைந்ததாகவும், புதிய தமிழகம் என்றும் இன்பத் திராவிடம் என்றும் சோஷலிசக் குடியரசென்றும், கம்யூனிஸ்ட் தமிழ்[illegible] பலவேறு பெயர்களாலே அழைக்கப்படும் இலட்சிய பூமியை ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாக நடைமுறைச் சித்தமாக்கிவிடும் பண்பும் பயனும் மிக்கதாகவும் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருக்குறள், தமிழருக்குத், தென்றல்! தென்றல் மட்டுமல்ல என்றென்றைக்கும் தமிழகத்தை வளப்படுத்தும் வற்றாத ஜீவநதி! வற்றாத ஜீவநதி மட்டுமே அல்ல, எட்ட எட்ட எட்டாது செல்லும் அடிவானம் போல, ஆழ்ந்து செல்லச் செல்ல ஆழமும், அகன்று செல்லச் செல்ல அகலமும் வளர்ந்துகொண்டே போகும் அறிவுக் கடல்!

திருக்குறள் தென்றல் என்றால், அந்தத் தென்றலிலே மிதந்துவரும் கீதம் சுயமரியாதை இயக்கம்! திருக்குறள் வற்றாத ஜீவநதி என்றால், அந்த ஜீவநதி அறிவுக்கடலிலே சங்கமமாகும் முகத்துவாரம் சுயமரியாதை இயக்கம்! திருக்குறள் ஆழமும் அகலமும் அறியமுடியாத அறிவுக் கடல் எனில் அந்தக் கடல் மீது பாடி அசைந்து செல்லும் பெரியதோர் கப்பல் சுயமரியாதை இயக்கம்!

ஆம்! குறள் தமிழர்க்குக் கேடயம் எனில், தன்மான இயக்கம், அந்தக் கேடயத்திற்கு ஏற்றதோர் கல்லவாள்! குறள் தமிழர்க்கு வீணை எனில் தன்மான இயக்கம் அந்த வீணையை மீட்டும் திறம்மிகு வேய்ங்குழலாள். குறள் எழில்மிகு முழுநிலவு எனில், தன்மான இயக்கம் அந்த அழகு நிலா பவனி வர வழி செய்யும் வான்! குறள் புத்தம் புதிய பெனிசிலின் இஞ்செக்ஷன் எனில் தன்மான இயக்கம் அந்த இஞ்செக்ஷன் போடும் தகுதியும் திறமையும் படைத்த ஒரே ஒரு டாக்டர்!

பெரியார், இவ் வாண்டுப் பொங்கல் விழாவன்று, திருக்குறள் இஞ்சக்ஷனை, சுயமரியாதை டாக்டரிடம் தந்து, நலிந்து கிடக்கும் தமிழகத்திற்கு இதன் துணைகொண்டு புத்துயிர் ஊட்டு என்று அன்புக் கட்டளை பிறப்பித்துள்ளார். அந்தக் கட்டளையை அவர்தம் மனம் மகிழும் வண்ணம் அன்னாரின் செல்வத் திருமகனாராய சுயமரியாதை டாக்டர் செய்து முடிக்கத் தவறார் என்னும் உறுதிமொழியினை அந்தத் திருமகன் சார்பில் பெரியார் அவர்கட்குக் கூறிடப் பெரிதும் விழைகிறோம்.

* * *

சுயமரியாதை இயக்கமே! புரட்சியின் சின்னமே! பகுத்தறிவின் காவலனே! **பெரியார் அளித்த பரிசு**தனை, குறளை, திருக்குறளை, உடனே கையிலேந்து! திக்கெட்டும் செல்! குறள் முழக்கம் செய்! புரட்சிப் பண் பாடு! ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலேயும் குறளுக்கு ஓர் உன்னதமான இடத்தைத் தேடிக் கொடு! அந்த உயர் பணியை உன்னால் ஆற்றமுடியும்! உன்னால்தான் ஆற்றமுடியும்!

———

ஆரியமயம் ஆகாத அரியநூல் திருக்குறள்!

குறட்சிறப்பு உணராதார்க்கு நாவலர் பாரதியார் சாட்டையடி!

சென்ற கிழமை நடைபெற்ற சென்னை திருக்குறள் மாநாட்டைத் திறந்துவைத்தருளான்று **நாவலர் பாரதியார் அவர்கள்** ஆற்றிய தமிழ்ப் பேருரையின் சில பகுதிகள்:

அகில இந்தியாவிலும் தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்குமே பொங்கல் திருநாள் கொண்டாடப்படுவதில்லை. எனவே இது தமிழர்க்கே யுரிய தனிச் சிறப்புத் திருநாள் என்பதை எவரும் ஒப்புவர். இத்தகு சால்புநிறை தமிழ்த் திருநாளை யொட்டி இத் திருக்குறள் மாநாடு கூட்டப்பட்டிருப்பது சாலச் சிறப்புடையது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருக்குறள் என்னும் இந்த ஒப்பற்ற தமிழ்க் கருவூலத்தின் பெருமையை, சால்பை, அருமையை, சிறப்பை, தமிழ் மக்களைவிட வேற்றவரே அதிகம் உணர்ந்துள்ளனர். நாம் திருக்குறளைப் போற்றுவதெல்லாம் ஒரு சடங்காக, ஒரு போலிக் கௌரவ வீண் பிதற்றலாகத்தான் இருக்கிறதே தவிர திருக்குறளை எம்முறையில் போற்றவேண்டுமோ அம்முறையில் இல்லை. திருவள்ளுவரை பிரம்மாவின் அவதாரம் என்று கதை எழுதி வைத்துக்கொண்டு அந்தக் கதையை மெய்யென்றெண்ணிக்கொண்டு ஆநந்தக் கூத்தாடுகிறோமே, அப்படித்தான் இருக்கிறது நாம் இதுவரை திருக்குறளைப் பாராட்டி வந்ததும்.

பரிமேலழகரைப்போல தம் மனம்போன போக்கில் திருக்குறளுக்கு உரை எழுதி வைத்த உரையாசிரியர்கள் என்ன சொன்னார்களோ அதை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் துர்ப்பாக்கிய நிலையில்தான் நாம் இதுவரை இருந்துவந்திருக்கிறோம். ஆனால் இப்போதுதான் கொஞ்ச காலமாக தமிழ் நாட்டில் ஒருவகை விழிப்பு ஏற்பட்டு, உரையாசிரியர்களின் உரையையே பற்றுக்கோடாகக் கொள்ளாமல், தாமே திருக்குறளை நேரடியாகச் சிந்தித்துப் பார்த்து அதன் சீரிய பொருளைச் செவ்விதின் உணரவேண்டுமென்ற நல்லுணர்ச்சி தமிழ்நாட்டில் அரும்பியுள்ளது. இது, தமிழகத்தின் நற்காலத்திற்கு அறிகுறியே.

திருக்குறள் என்றால் அஃது ஓர் ஆரியக் கலாசாரத் திரட்டு நூல் என்றும், ஏதோ வடமொழியில் உள்ள மநு முதலான தர்ம சாத்திரங்களை வடித்தெடுத்து இறுத்து இறக்கி அப்படியே தமிழ் மொழியில் தரப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு நூல் என்றும் பழங்காலத்தில் பல புலவர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அப்படி எண்ணிக்கிடப்பவர்கள் இப்போதும் சிலர் இருக்கின்றார்கள். ஆனால் உண்மை அது அல்ல. தமிழர்களுடைய சிறந்த பண்புகள் பழக்க வழக்கங்கள் கொள்கை கோட்பாடுகள் சால்பு சிறப்புகள் ஆகியவற்றை — அவை சரியோ தப்போ, அவை தமிழரின் பழம் பெரு நெறியின் விளக்கங்கள் — அவற்றையெல்லாம் அழகுறத் தொகுத்துத் தந்துள்ள அரிய இலக்கியம் திருக்குறள்.

குறளாசிரியர் காலத்திலேயே தமிழரிடை ஆரியர் தொடர்பு ஏற்பட்டு விட்டது ஆனால் தமிழகம் ஆரிய மயமாகவில்லை; தமிழர் ஆரியர் கருத்துக்களை அறியலாயினர் ஆனால் ஆரியக் கருத்துக்களுக்கு அடிமைகளாகிவிடவில்லை. தமிழகம், ஆரியத் தொடர்பு கொண்டு ஆனால் ஆரியத்திற்கு அடிமைப்படாமல் வாழ்ந்து வந்த கால நிலையிலேதான் திருக்குறள் என்னும் இத் தமிழ்ப் பெரு நூல் எழுவதாயிற்று. ஆரியர் கருத்துக்களில் சிறந்தன உண்டேல் ஏற்றுக்கொண்டு, தனித் தமிழ்த் துறைகளை சிறிதும் விட்டுக் கொடாமல், வலியுறுத்திய தமிழ்ப் பெரியார்களுள்ளே தலைசிறந்த பெரியாரே திருவள்ளுவனார்.

ஆதலாலே, திருக்குறளை எப்படிப் படிக்கவேண்டும் என்றால் ஆரிய மயமாகாத, ஆரியத்திற்கு அடிமைப்படாத, தனித் தமிழ்க் கருத்துக்களைத் திரட்டித் தந்த தமிழர் பண்பாட்டின் சிறப்புச் சின்னம் போன்ற நூல் என்று கண்ணோடு படிக்கவேண்டும். அப்போதுதான் குறளின் முழுச் சிறப்பும் முழுப் பொருளும் விளங்கத் தோன்றுவன ஆகும்.

சிலர்—அவர்கள் தங்களைத் தமிழ்ப் புலவர் என்றும் சொல்லிக் கொள்கின்றனர், திருக்குறள் நேற்றோ அதற்கு முந்திய நாளோ தோன்றிய இலக்கியந்தானே தவிர தொன்மைத் தமிழ்நூல் அன்று என்று கூறிவருகின்றனர். அவர்கள் கூற்று அறியாதார் கூற்றே.

பாயிரம் என்னும் பகுதி தமிழ் நூற்களுக்கு இருக்க வேண்டும் என்னும் கருத்து மிகவும் பிற்பட்ட காலத்திலேயே தமிழ் நாட்டில் வந்து புகுந்தது — திருக்குறளில் பாயிரம் இருக்கிறது — எனவே திருக்குறள், காலத்தால் பிற்பட்ட நூல்—மிக அண்மைக் காலத்திலேயே தோன்றிய நூல் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் திருக்குறளில் பாயிரம் என்பதாக ஏதுமே கிடையாது என்பது என் கருத்து. திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களை பாயிரம் என்று கருதும் வழக்கம் நீண்ட நாட்களாகவே, உரையாசிரியர்கள் காலம் முதலாகவே, தமிழகத்தில் இருந்துவருகிறது என்றாலும் இந்த வழக்கம் முற்றிலும் தவறானது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனெனில் திருக்குறளில் பாயிரம் என்று **சொல்லப்படும்** பகுதியில் பாயிரத்திற்கு இருக்கவேண்டிய இலக்கணங்கள் 13ல் ஒன்றுகூட இல்லை. எப்படி இருக்கும்? அது பாயிரமாயிருந்தால்தானே இருப்பதற்கு. பாயிரம் அல்லாததைப் பாயிர

என்று பாடிப் பாடி இடைக்காலத் தமிழ்ப்புலவர்கள திருக்குறளுக்குத் தேடிய தீங்கு எவ்வளவு தூரம் தவறான விளைவுகளைத் தந்திருக்கின்றது என்றால் பாயிரப் பகுதி திருக்குறளில் இருக்கும் காரணத்தால் குறள் நூல் பிற்காலத்தது என்னும் கொள்கை சிலர் உள்ளத்தில் வேர் ஊன்றிப்போய் இருக்கிறது என்பதுமட்டு மல்லாமல் அந்த முதல் நான்கு அதிகாரங்களை திருவள்ளுவர் இயற்றவில்லை என்றுகூடச் சொல்லத் தொடங்கி விட்டனர் சிலர். அடேயப்பா! இந்த இடைக்காலத் தமிழ்ப் புலவர்கள் இல்லாத பாயிரத்தை இருப்பதாக எண்ணிக்கொண்டு எழுதிவைத்த கற்பனை எவ்வளவு கேடுகளைத் தந்துவிட்டது!

திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்கள் பாயிரம் அல்ல—பாயிரம் என்பதே தமிழ் மொழியில தோன்றாத காலத்தில் ஏற்பட்ட நூல் திருக்குறள்—ஆனால் அதற்காக அந்த நான்கு அதிகாரங்களுமே திருவள்ளுவரால் இயற்றப்படவில்லை என்று கூறுவது பொருந்தாது—பிற்காலப் புலவர்கள் அந்த அதிகாரங்களை ஒன்று சேர்த்து பாயிரம் என்று பெயரிட்டதுதான் தவறு. இவ்வளவு பெருந் தவறினைப் புலவர்கள் இழைக்க நேரிட்டதற்குக் காரணமே அவர்கள் தொல்காப்பியத்தை மறந்துவிட்டதுதான். தமிழருக்குக்கிடைத்துள்ள ஒப்பற்ற இலக்கியமாகிய தொல்காப்பியத்தை எவ்வளவு தூரம் தமிழ்ப் புலவர்கள் போற்ற மறுத்துவிட்டனர் என்பதை எண்ணும்போது எனக்கு வாழ்க்கை கூட கசக்கிறது.

தொல்காப்பியத்தில், ஒரு தமிழ் நூலின் இலக்கணத்தைக் கூறும் இடத்து, அந் நூலின் தொடக்கத்தில் வாழ்த்தியல் என்னும் பகுதி அமைந்திருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் இந்த வாழ்த்தியல் நான்கு வகைப்படும். **(1) புறநிலை வாழ்த்தியல்:** கடவுளை வாழ்த்துவது. **(2) வாயுறை வாழ்த்து:** அல்லது மக்களை வாழ்த்துவது. **(3) அவையடக்க இயல்:** அல்லது சான்றோர்க்கு வணக்கம் கூறுவது. **(4) செவியறிவுறூஉ:** அல்லது நல்லது எது என்பதை மக்கட்கு அறிவுறுத்துதல்.

இந்த நால்வகை வாழ்த்துக்களில் ஏதேனும் ஒன்றோ இரண்டோ மூன்றோ அல்லது நான்குமோ ஒரு நூலுக்கு வாழ்த்தாக அமைந்திருக்கலாம். ஏதேனும் ஒன்று கட்டாயம் அமைந்திருக்க வேண்டும். நான்கும் அமைந்திருக்கத் தேவையில்லை.

இந்த வாழ்த்தியல் வகைகள் நான்குமே திருக்குறளில் காணப்படும் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய முதல் நான்கு அதிகாரங்களாகும். தொல்காப்பிய இலக்கணம் குறிப்பிடும் இந்த நால்வகை வாழ்த்துக்களையும் தன்னகத்தே கொண்ட ஒரே ஒரு நூல் திருக்குறளே ஆகும். சிலப்பதிகாரத்தில் முதல் மூன்று வகைகள் மட்டுமே உள்ளன— செவியறிவுறூஉ இல்லை. இன்னும் பிற்பட்ட நூற்களில் முதலிரண்டு மட்டுமே உள்ளன—அவை அடக்க இயல் இல்லை. இன்னும் பிற்பட்ட நூற்களில் கடவுள் வாழ்த்து ஒன்று மட்டுமே உண்டு. ஆகவே தமிழ் நூற்களில் ஏதேனும் ஒன்றின் காலத்தை நிலைநாட்ட இந்த வாழ்த்தியல் வகைகள் நான்கில் எத்தனை வகைகள் அந்நூலில் கையாளப்பட்டுள்ளன என்பதை எண்ணிப் பார்த்தாலே போதுமானதாகும். அப்படிப் பார்க்கும்போது திருக்குறள் மிகப் பழைய நூல், தொல்காப்பியர் நெறிவழி அமைந்துள்ள நன்னூல், சங்க இலக்கியங்களை விடப் பழைய நூல் என்பது நன்கு புலப்படும்.

இப்போது சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படும் நூல்கள் பலவற்றிலும் திருக்குறட்பாக்கள் மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளன. இதுவும் குறளின் பழமைக்குத் தக்க சான்று.

பிற்கால நூல்களைப் போலன்றி, தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது போலவே, அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று துறைகளைப் பற்றி மட்டுமே கூறி 'வீடு' என்பதுபற்றி ஏதும் கூறாமலிருக்கிறது திருக்குறள். இதுவும் குறளின் பழமையை வலியுறுத்துவதுவே.

திருவள்ளுவர் இறைவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர். ஆனால் அவர் குறிப்பிடும் இறைவன் இரண்டு பெண்டாட்டி மூன்று பெண்டாட்டி நான்காவதாக பெண்டாட்டி அல்லாத பெண் ஒருத்தி இப்படியெல்லாம் கொண்டிருப்பதாக பிற்கால புராணகாரர்கள் எழுதி வைத்தார்களே அதுபோன்ற இறைவன் அல்லன். அவர் இறைவனை ஒப்பற்றவனாக, தனக்கு உவமை இல்லாதவனாக, உலகத் தலைவனாக, வேண்டுதல் வேண்டாமை இல்லாதவனாகக் கொண்டாடுகிறார். நந்தியம் பெருமான் மேலே சவாரி செய்யும் சிவன் பெரியவனா, கருடன் மேலே சவாரி செய்யும் விஷ்ணு பெரியவனா என்பதுபோன்ற பேதமைச் சண்டையில் இறங்கினானில்லை வள்ளுவன். எவ்வளவுக்கெவ்வளவு எதெது தங்கட்குத் தெரியாதோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றைப் பற்றித் தெரிந்ததுபோல் பாவித்து தெரியாததை எல்லாம் 'உளறி வைக்கும்' அறியாமை இடைக்காலப் புலவர்களைப் பிடித்தாட்டிற்றே அந்தப் பேதமை திருவள்ளுவரிடம் சிறிதும் கிடையாது. திருக்குறள் தொன்மைமிகுந்த, தமிழ்ப் பண்பு வடிவான, ஆரிய மயம் ஆகாத, தொல்காப்பிய நெறி வழி நிற்கும் உயர்ந்த நூல் என்பதற்கு இதுவே தக்க சான்று.

சிவபெருமானுக்குத் தமிழே தெரியாதாம்! அவர் வாயில் தமிழ் நுழையாதாம்! அவருக்கு ஜஞ்சிகிருதம்தான் (சமஸ்கிருதம்) தெரியுமாம்! அதனால் அவர் சிவநெறியைத் தமிழிலே சொல்லவில்லையாம்! ஜஞ்சிகிருதத்தில்தான் சொன்னாராம்! இப்படி மாதவ சிவஞான யோகிகள் என்னும் பிற்கால சிவநெறிப் புலவர் எழுதி வைத்திருக்கிறார். அட சனியனே! இப்படி

இளங்கோவன் தோற்றம்

தகட்டூர் ஆசிரியர் தோழர் சுப்பையாவுக்கும் தோழியர் மலர்க்குழலிக்கும் பிறந்த ஆண் மகவுக்கு 14-11-48ல் **இளங்கோவன்** எனப் பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக போர்வாளுக்கு ரூ. 1-8-0 நன்கொடை யளிக்கப்பட்டது.

(வரப்பெற்றோம்)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)

யுமா ஒரு சிவன் இருப்பான்! நான் சொல்கிறேன் தமிழ் தெரியாதென்றால் சிவன் கடவுள் அல்ல, பிசாசு! நம் அருமைத் தமிழை அறியாத ஆண்டவன் ஒருவன் இருப்பானால் அந்த ஆண்டவன் நமக்குத் தேவையே இல்லை. பிற்காலப் புலவர்கள் ஆண்டவனைப் பற்றிக் கூறியுள்ள இழிந்த முறையோடு திருவள்ளுவர் கூறியுள்ள உயர்ந்த முறையை ஒப்பிட்டுப் பாருங்கள். திருவள்ளுவரின் சிறப்பு உங்கட்கு எளிதில் புலனாகும்.

எப்பொருள், யார், யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு—இது தான் தமிழனின் பண்பாடு. மனு சொன்னார், பராசர் சொன்னார், வேத வியாசர் சொன்னார், என்றெல்லாம் சொன்னால் கேட்க மாட்டான் தமிழன். வள்ளுவர் சொன்னார். கம்பர் சொன்னார்— கேட்கமாட்டான் தமிழன். சரி தானா? நியாயமா? நல்லதா? தேவையா?—இதைத்தான் கேட்பான். "**கடன் என்ப நல்லவை எல்லாம்.**" [கடன்—கடமை. நல்லதைச் செய்வதே நம் கடமை]— இந்தக் குறள்தான் திருக்குறள் நூலின் அடிப்படை, இந்தக்குறளே தான் தமிழர் பண்புகளுக்கெல்லாம் அடிப்படை.

முன்னேயும் சொன்னேன். இப்போது மறுபடியும் சொல்கிறேன். திருக்குறளைப் படிப்பவர் யாராயினும் அவர், திருக்குறளைப் படிக்கு முன்னர், ஆரிய நாகரிகம் கலவாத தமிழ் நாகரிகம் ஒன்று தமிழகத்தில் தலைநிமிர்ந்தோங்கித் தழைத்திருந்தது என்பதையும் திருக்குறள் அந்தத் தனித் தமிழ் நாகரிகத்தின் வழிவந்த உயர்தனிச் சிறப்பு நூல் என்பதையும் உணர்ந்து ஆக வேண்டும். இவற்றை உணராதார் திருக்குறளைப் படித்துப் பயன் இல்லை.

நேரம் இருந்தால் நாளை மீண்டும் பேசுவேன். இப்போது இந்த அளவோடு நிறுத்திக் கொண்டு தமிழருடைய சால்புகள் அத்தனையையும் ஒன்று திரட்டித் தொகுத்துத் தந்துள்ள அரிய நூலாகிய திருக்குறள் வாழ்க என்று சொல்லி இந்த மாநாட்டைக் கழிபேருவகையுடன் திறந்துவைக்கின்றேன்.

அண்ணாவின் அரிய நூல்கள்

அறப்போர்	1 0
இலட்சிய வரலாறு	1 0
ரோமாபுரி ராணிகள்	2 4
கம்பரசம்	1 8
குமரிக்கோட்டம்	1 0
விடுதலைப் போர்	1 0
கற்பனைச் சித்திரம்	1 0
சிறு கதை	1 0
ஆரிய மாயை	1 0
உலகப் பெரியார்	1 0
ஜமீன் இனாம் ஒழிப்பு	1 0
பணத்தோட்டம்	1 0
தீ பரவட்டும்	1 0
1858—1948	1 0
வர்ணாஸ்ரமம்	0 12
ரேடியோவில் அண்ணா	0 12
நிலையும் நினைப்பும்	0 12
தாழ்ந்த தமிழகம்	0 8
மே தினம்	0 5

அண்ணாவின் ரேடியோ பேச்சுகள்

தீண்டாமை, சமதர்மம், வாலிபர் தேவை, மேடைப் பேச்சு, காந்தி, விதிக்கு அடிமைத்தனம், ஸ்தாபன ஐக்யம், பத்திரிகைத் தொழில், வீட்டுக்கொரு புத்தகசாலை, சொல்வதெல்லாம் செய்தல் சுதந்திரம், Peoples Poet.

ரேடியோ பேச்சுகள் தனித்தனி அணா 2

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.